RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 25 | பிப்ரவரி.1 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5















## கரூரில் கனிமவளக் கொள்ளை: செய்தி சேகரிக்கச் சென்ற திருச்சி செய்தியாளர் மீது தாக்குதல் மற்றும் கடத்தல்

கரூர் பிப் 01.-

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரத்தில் சட்டவிரோத கனிமவளக் கொள்ளை குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற திருச்சி செய்தியாளர் கதிரவன் மற்றும் அவரது குழுவினர் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னணி:

கிருஷ்ணராயபுரத்தில் அரசு அனுமதித்த அளவை விட அதிகமாக கனிமவளக் கொள்ளை நடைபெறுவதாகப் புகார் எழுந்தது. ஏற்கனவே 2022ஆம் ஆண்டு இந்த குவாரிக்கு 23.55 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டும், அது தொடர்ந்து செயல்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. இது குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர் கதிரவனிடமிருந்து கேமரா மற்றும் மைக் ஆகியவற்றைப் பிடுங்கிக் கொண்டு, ஒரு கும்பல் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

கடத்தல் மற்றும் மீட்பு:

செய்தியாளர், ஒளிப்பதிவாளர் மற்றும் வழக்கறிஞர் உள்ளிட்ட நான்கு பேரை அந்தக் கும்பல் கடத்திச் சென்றது. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக யாரையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை நீடித்தது. இது குறித்துத் தகவல் அறிந்த எஸ்பி ஜோஸ் தங்கையா, டிஎஸ்பி தலைமையிலான தனிப்படையைச் சம்பவ இடத்திற்கு விரைந்து அனுப்பினார்.

குற்றச்சாட்டுகள்:

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் திமுக எம்எல்ஏ பழனியாண்டி மற்றும் அவரது ஆதரவாளர்கள் சுமார் 50 பேருக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. காவல்துறையினரின் அதிரடி நடவடிக்கையால், கடத்தப்பட்ட செய்தியாளர் உள்ளிட்ட நான்கு பேரும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கம், ஆர்.எம்.ஆர். பாசறை சார்பில் மன்னர் திருமலை நாயக்கர் 443-வது பிறந்த நாள் விழா!

### அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பு!!

மதுரை, பிப்.1

மன்னர் திருமலை நாயக்கரின் 443 வது பிறந்த நாள் விழா தமிழ் நாடு நாயுடு மகாஜன சங்கமும், ஆர்எம் ஆர்பாசறை இணைந்து நடத்துகிறது. நிகழ்ச்சி திருமலை நாயக்கர் மஹால் வளாகத்தில் நடக்கிறது. ஆர்.எம்.ஆர். பாசறை சார்பில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை தமிழக அரசின் முன்னாள் தலைமை செயலாளர் ராம்மோகன்ராவ் வழங்குகிறார்.

விழாவிற்கு தமிழ் நாடு நாயுடு மகாஜன சங்க மாநில தலைவர் டாக்டர் முத்துவேல்ராஜ்தலைமை தாங்குகிறார். மாநில துணை செயலாளர். பிரபுநாயுடு, மாநில துணை தலைவர்கள் தேனி வீரராஜ், சுருதிரமேஷ் ,நாராயணசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பொது செயலாளர் போஸ் சன்னாசி.ரத்தினவேல், சீனிவாசன், ஆகியோர்வரவேற்பு உரை ஆற்றுகின்றனர். விழாவில் அமைச்சர்கள் மூர்த்தி, எ.வ. வேலு, சேகர் பாபு, பழனிவேல் தியாகராஜன், தங்கம் தென்னரசு, சாத்தூர் ராமச்சந்திரன், தளபதி எம் எல்ஏ ஆகியோர் மன்னர் திருமலை நாயக்கர் சிலைக்கு மாலை அணி வித்து மரியாதை செலுத்து சிறப்பு துரைகின்றனர் சிறப்புவிருந்தினராக வைகோ, எம்பி, தேமுதிகஇளைஞர் அணி செயலாளர் விஜய பிரபாகரன், பாஜக ராம சீனிவாசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர் அரண்மனை முன்பு ஆயிரம் பேருக்கு அன்னதானத்தை தமிழக அரசு முன்னாள் தலைமை செயலாளர் ராம்மோகன் ராவ் தொடங்கி வைக்கிறார். விழாவில் சீனிவாசன் ஜெகநாதன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

விழா ஏற்பாடுகளை இளைஞர் அணி நிர்வாகிகள் ராம்குமார், அழகர்சாமி, சுந்தர்,பாக்யராஜ்,பிரபு, ஆகியோர் செய்து வருகின்றனர்.



## மதுரையில் சாலை விதிகளை மதித்த வாகன ஓட்டிகளுக்கு திருக்குறள் மற்றும் இனிப்புகள் வழங்கி கௌரவிப்பு

மதுரை பிப் 01.-

மதுரை மாநகர போக்குவரத்து காவல்துறை, முதலுதவி சமூக நல அறக்கட்டளை மற்றும் அறந்தாங்கி நிஷா அன்பு அறக்கட்டளை ஆகியவை இணைந்து 37 வது சாலை பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு, காமராஜர் சாலை, குருவிக்காரன் சாலை சிக்னல் பகுதியில் சிறப்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிந்தவர்களுக்குப் பாராட்டுசாலை பாதுகாப்பு மாதத்தின் நிறைவு நாளான நேற்று, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு மாறுபட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. சாலை விதிகளை முறையாகப் பின்பற்றி, இருசக்கர வாகனங்களில் தலைக்கவசம் அணிந்து வந்தவர்களுக்கும், நான்கு சக்கர வாகனங்களில் சீட் பெல்ட் அணிந்து வந்தவர்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் திருக்குறள் புத்தகங்கள், எழுதுகோல்கள் மற்றும் இனிப்பு பெட்டகங்கள் வழங்கப்பட்டன.

முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்புதல்லாகுளம் போக்குவரத்து உதவி ஆணையர் இளமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திலகர் திடல் போக்குவரத்து காவல் ஆய்வாளர் தங்கமணி முன்னிலை வகித்து பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில்: * சமூக ஆர்வலர் சக்தி முருகன்

* முதலுதவி சமூக நல அறக்கட்டளை மாநிலத் துணைத் தலைவர் செய்யது ரியாஸ் கான்

* அறந்தாங்கி நிஷா அன்பு அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் முனைவர் முபின் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு உரைகளை வழங்கினர்.

தொடரும் விழிப்புணர்வு பணிகள்

மதுரை மாநகர் முழுவதும் கடந்த ஒரு மாதமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வரும் நிலையில், நேற்றைய நிகழ்வு வாகன ஓட்டிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதிப்பதோடு மட்டுமல்லாமல், விதிகளைப் பின்பற்றுபவர்களைக் கௌரவிப்பதன் மூலம் மற்றவர்களுக்கும் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்த முடியும் எனப் போக்குவரத்து காவல்துறையினர் தெரிவித்தனர்.

## சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் அருகே சிறாவயல் திடலில் மகாத்மா காந்தி தோழர் ஜீவா திருஉருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்!


காரைக்குடி பிப் 01.-

1927இல் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்த மகாத்மா காந்தியடிகள், சிவகங்கை மாவட்டம் திருப்புத்தூர் அருகே சிறாவயலில் தோழர் ஜீவா நடத்தி வந்த ஆசிரமத்திற்கு நேரில் சென்று சந்தித்தார். அதன் நினைவாக சிறாவயல் மஞ்சுவிரட்டு திடலில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் ரு 3.27 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள உத்தமர் காந்தியடிகள் தோழர் ஜீவா திருவுருவ சிலைகளுடன் கூடிய அரங்கத்தை தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் திறந்து வைத்தார். பின்பு அவர்களது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தியவர்,



அமைச்சர்கள் சாமிநாதன், பெரியகருப்பன், மெய்யநாதன், தங்கம் தென்னரசு, கே.கே. எஸ்.எஸ்.ஆர் உள்ளிட்ட அமைச்சர்கள் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம், முன்னாள் அமைச்சர் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி, மாவட்ட ஆட்சியர் பொற்கொடி உள்ளிட்டோருடன் இணைந்து திருவுருவ சிலை அருகே நின்று புகைப்படம் எடுத்துக் கொண்டார். அதன் பின்பு மணிமண்டபம் முன்பு கூடிய மக்கள் மத்தியில் பேசுகையில், காந்தி ஜீவா சந்திப்பு வரலாற்று சிறப்புமிக்கது. தற்போது அதை நினைவுச்சின்னமாக ஆக்கியுள்ளோம் என்றார்.

பின்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் சண்முகம், சென்னையில் கார்ல் மார்க்ஸ் திருவுருவச்சிலை திறந்து வைக்க வேண்டுகோள் விடுத்தார், வருகின்ற பிப்ரவரி மாதம் 6ம் சென்னையில் கார்ல் மார்க்சின் திருவருட்சிலை திறக்கப்படும் என்றவர், நூலகத்தை அதிகமாக பயன்படுத்தியவர் கார்ல் மார்க்ஸ், அவரது சிலை திறப்பு விழாவில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். பின்பு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டமைக்காக நான் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன் என கூறிவிட்டு காரைக்குடி புறப்பட்டு சென்றார்.



## அய்யூர் பசுமை பூங்காவிற்கு அரசு பள்ளி மாணவியர்கள் ஒருநாள் சுற்றுச்சூழல் முகாம் பயணம்

கிருஷ்ணகிரி, பிப்.01.-

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அடுத்த அய்யூர் பசுமை பூங்காவிற்கு, கிருஷ்ணகிரியில் இருந்து 50 மாணவியர்கள் ஒருநாள் சுற்றுச்சூழல் முகாம் பயணமாக சென்றனர்.

கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியின் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில், 50 மாணவியர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் நேற்று அய்யூர் பசுமை பூங்காவிற்கு இயற்கை கல்வி முகாம் பயணம் மேற்கொண்டனர். இம்முகாமிற்கு சென்ற மாணவியர்களை மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் திரு. தீர்த்தகிரி அவர்கள் வழியனுப்பி வைத்தார்.

நிகழ்ச்சியில், பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி நளினி, மாவட்ட கலெக்டரின் பசுமை தோழன் திரு. கோகுல் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த சுற்றுச்சூழல் முகாமின் போது மாணவியர்களுக்கு நார்கொம்பு மான், யானை உள்ளிட்ட வன உயிரினங்களின் பழக்க வழக்கங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்கள் இடையேயான மோதல்கள் குறித்த விளக்கங்கள் அளிக்கப்பட்டன. மேலும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள், வனம் மற்றும் வன உயிரினங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முகாமில் கலந்து கொண்ட மாணவியர்கள் அய்யூர் பசுமை பூங்காவை சுற்றிப் பார்த்து, யானைகள் நடமாடும் வழித்தடங்கள், அய்யூர் ஏரியில் யானைகள் தண்ணீர் குடிக்கும் இடங்கள் ஆகியவற்றை பாதுகாப்புடன் பார்வையிட்டனர். இம்முகாம் மாணவியர்களிடையே இயற்கை பாதுகாப்பு குறித்த ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.





## சிந்தாய் அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா திரளான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்

ராமநாதபுரம், பிப்,1,-

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே பருக்கைக்குடியில் அமைந்துள்ள ஸ்ரீ சிந்தாய் அம்மன் கோவில் கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது கும்பாபிஷேக விழாவையொட்டி கடந்த வாரம் யாகசாலை பூஜையுடன் கும்பாபிஷேக திருப்பணிகள் தொடங்கியது தொடர்ந்து புனித நதிகளிலிருந்து இருந்து புனித நீர் எடுத்து வரப்பட்டு கணபதி ஹோமம், தனபூஜை,கோ பூஜை, மகாலட்சுமி ஹோமம் உள்ளிட்ட சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இதனையடுத்து இன்று காலை நான்காம் கால யாக சாலை பூஜை நிறைவு பெற்று சிவாச்சாரியார்களின் வேதமந்திரங்கள் முழங்க கலசங்களில் புனித நீர் கொண்டு வந்து கும்பம் மற்றும் சுவாமி மீது புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்று பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. தொடர்ந்து சிந்தாய் அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு பால், தயிர்,சந்தனம், பன்னீர் உள்ளிட்ட திரவிய பொடிகளால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது கும்பாபிஷேகத்தில் பருக்கைக்குடி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

## கருக்கன் சாவடியில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை, அசோக்குமார் எம் எல் ஏ பங்கேற்பு

கிருஷ்ணகிரி, பிப்.01.-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் எர்ரஅள்ளி ஊராட்சி கருக்கன் சாவடி கிராமத்தில், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான கே.அசோக்குமார் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் பையூர் பெ.ரவி, இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம்.சதீஷ்குமார்,



நகர செயலாளர் விமல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம், மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயக்குமார், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், ஒன்றிய துணை செயலாளர்கள் விக்ரம் குமார், சரவணன், ஒன்றிய பாசறை செயலாளர் பெரியசாமி, முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர்கள் சண்முகம், முத்து, முன்னாள் நகர பொருளாளர் ராஜவேல், எம்ஜிஆர் இளைஞர் அணி ஒன்றிய செயலாளர் கணேசன், ஜெயபிரகாஷ் உள்ளிட்ட அதிமுக கட்சி நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த சாலை அமைக்கும் பணியின் மூலம் கருக்கன் சாவடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறுவதுடன், போக்குவரத்து வசதி மேம்படும் என தெரிவிக்கப்பட்டது.



## ஆர் எஸ் மங்கலம் தாலுகா சுற்று வட்டார பகுதியில் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளை எதிர்பார்த்து காத்து இருக்கும் கிராம மக்கள்

ஆர்.எஸ். மங்கலம். பிப்.01.-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ். மங்கலம் தாலுகாவிற்கு உட்பட்ட பெரும்பாலான ஊராட்சிகளில் கடந்த சில வாரங்களாக நூறுநாள் வேலை திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணிகள் பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் உள்ளதால் எப்போது பணிகள் வழங்கப்படும் என எதிர் பார்ப்பில் கிராம மக்கள் காத்து இருக்கின்றனர் அது மட்டுமின்றி இந்த பணியின் கீழ் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிருந்த நிலையில் பணிகள் நடைபெறாமல் மரக்கன்று நடும் பணி கிடப்பில் போடப்பட்டு இருப்பதாக கிராம மக்கள் குற்றச்சாட்டியுள்ளனர். போர்க்கால அடிப்படையில் நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பணிகளை பணியாளர்களுக்கு வழங்க வேண்டும் மெனவும் பெரும்பாலான ஊராட்சிகளில் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் பணித்தள பொறுப்பாளர்களை சுழற்சி முறையில் மாற்றம் செய்து புதிய நபர்களை பணிதள பொறுப்பாளர்களாக பணியமர்த்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் கழிவுநீர் கால்வாய் சீரமைப்பு பணிக்கு பூமி பூஜை

கிருஷ்ணகிரி,பிப் 01.-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் பேரூராட்சி வார்டு எண்-13க்கு உட்பட்ட சண்முக செட்டி தெருவில், பூங்காவனத்தம்மன் கோயில் அருகே, காவேரிப்பட்டினம் பேரூராட்சி பொது நிதியிலிருந்து ரூபாய் 5.5 லட்சம் மதிப்பீட்டில் கழிவுநீர் கால்வாய் சீரமைப்பு மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணிக்காக பூமி பூஜை நடைபெற்றது.

இந்த பணிகளை காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் அவர்கள் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஒட்டுநர் அணி துணைத் தலைவர் செந்தில்குமார்,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மணி விஜயன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சங்கர்,நகர இளைஞரணி நிர்வாகி தினேஷ்,வார்டு கவுன்சிலர்கள் கீதா ஞானசேகரன், அமுதா சக்திவேல், தமிழ் செல்வி சோபன்பாபு, கோகுல்ராஜ், அமுதா பழனி, ஒன்றிய பிரதிநிதி முட்டை மணி மற்றும் இளையராஜா, விக்கி, அக்பர், சங்கர், விசிக ஒன்றிய செயலாளர் சசி, ஓவியர் தாஸ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




## மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்புமுகாம்: 68 பேருக்கு பணி நியமன ஆணை, கலெக்டர் வழங்கினார்

கிருஷ்ணகிரி, பிப்.01.-

கிருஷ்ணகிரி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடந்தது. மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தலைமை வகித்தார். மாவட்ட எஸ்.பி., தங்கதுரை முன்னிலை வகித்தார். மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் கவுரிசங்கர் வரவேற்றார்.

தனியார் துறையில் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி கலெக்டர் தினேஷ்குமார் பேசியதாவது:

படித்த வேலை வாய்ப்பற்றமாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் இந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடத்தப் பட்டது.

இம்முகாமில், பிரபல தனியார் துறை நிறுவனங்கள் பங்கேற்று தங் களுக்கு தேவையான ஆட்களை தேர்வு செய்தனர். அதன்படி, 138 மாற்றுத்திறனாளிகளில் தகுதியான, 68 பேர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், ஏற்கனவே நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர் வுபெற்று தற்போது பணிபுரிந்து வருபவர்களுக்கும் பரிசு வழங்கி யுள்ளோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், இந்தியன் வங்கி சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிலைய இயக்குனர் வெங்க டேசன், பள்ளி தலைமையாசிரியர் நளினி உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பழைய பல்லாவரத்தில் ஸ்ரீ பச்சையம்மன் வாழ் முனீஸ்வரன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் 1000 கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டு சாமிதரிசனம் செய்தனர்

பல்லாவரம் பிப் 01.-

செங்கல்பட்டு மாவட்டம் பழைய பல்லாவரத்தில் உள்ள ஸ்ரீ பச்சையம்மன் வாழ் முனீஸ்வரன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை காலையில் கும்பாபிஷேக விழா தொடங்கியது காலை பூஜைகளுடன் துவங்கி அம்மன் அபிஷேகம் நடைபெற்றது அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரமும் செய்யப்பட்டு யாகசாலையில் கோபுரத்தில் இருந்து எடுத்து செல்ல பட்ட புனித நீரை கோபுரத்தின் உச்சியில் அமைந்துள்ள கலசத்திற்கு ஊற்றி கும்பாபிஷேகம்





நடைபெற்றது. கூடியிருந்த பக்தர்கள் ஓம் சக்தி என கோஷத்தை எழுப்பி வழிபட்டனர் அதன் பிறகு கலசத்தில் ஊற்றப்பட்ட புனித நீரானது பொதுமக்களின் மீது தெளிக்கப்பட்டது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கும்பாபிஷேகம் சிறப்பு வழிபாடுகளில் கலந்துகொண்டனர். பின்னர் ஆயிரக்கணக்கான பக்த கோடிகளுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பான முறையில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ், 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, 16வது வார்டு மாமன்ற நெடுஞ் செழியன், 21வது வார்டு மாமன்ற உறுப்பினர் கலைச்செல்வி வெங்கடேசன், ஆகியோர் கலந்து கொண்டு அம்மனுக்கு சிறப்பு வழிபாடு செய்தனர் இந்த நிகழ்ச்சியில் 15வது வார்டு டிவி ராஜா, இளைஞரணி மாவட்ட துணை அமைப்பாளர் ஜானகிராமன் வட்டச் செயலாளர்கள் வெங்கடேசன், பிரான்சிஸ் பால், அந்தோணி, அறநிலைத்துறை அதிகாரிகள் பொதுமக்கள் ஆலய நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## பழனி தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக இரண்டு நாட்கள் தொடர்ந்து ஐந்து வகையான சாதகங்களுடன் அன்னதானம்

பழனி பிப் 1.-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தமிழக வெற்றி கழகத்தின் சார்பாக மூன்றாம் படை வீடான முருகப் பெருமானுக்குரிய மிக முக்கியமான விழாக்களில் ஒன்று தைப்பூசத் திருவிழா இவ்விழா வருகின்ற பிப்ரவரி 1ஆம் தேதி தேரோட்டத்துடனும் நடைபெற உள்ளது. இவ்விழா தை மாத பௌர்ணமியும், பூசம் நட்சத்திரமும் இணைந்து வரும் நாளில் தைப்பூச விழா கொண்டாடப்படுவது வழக்கம். இந்த நாளில் ஏராளமான முருக பக்தர்கள் விரதம் இருந்து, முருகப் பெருமானை வழிபடுவது வழக்கம். அதிகமான பக்தர்கள் பல்வேறு மாநிலம் மற்றும் மதுரை திருச்சி சேலம் சிவகங்கை கோயமுத்தூர் திருப்பூர் போன்ற பகுதிகளில் இருந்து மாலை 3 மணியிலிருந்து மறுநாள் காலை 8 மணி வரை குளிர்ந்த பொழுதில் பக்தர்கள் தாங்கள் ஊர்களில் இருந்து தைப்பூசத்திற்கு பாதயாத்திரை நடந்து வரும் பக்தர்களுக்கு மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா தலைமையில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலன் ஏற்பாட்டில் நகர செயலாளர் மிதுன் ஒன்றிய துணைச் செயலாளர் சிவா ஒன்றிய இணைச் செயலாளர் நாகராஜ் மற்றும் கட்சி நிர்வாகிகள் இரண்டு நாட்களுக்கு தொடர்ந்து அன்னதானம். ஐந்து வகையான சாதங்களுடன் தண்ணீர் பாட்டில் பிஸ்கட் போன்ற வகை வழங்கி வருகின்றனர்



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சி 10வது வார்டுக்குட்பட்ட ரவிவர்மன் புதுத்தெருவில் காங்கிரீட் தளம் அமைக்கும் பணியினை நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்.உடன் மண்டல தலைவர் .ஜவஹர் மாமன்ற உறுப்பினர் .வளர்மதி வட்ட செயலாளர் அலோசியஸ் தி மு க நிர்வாகி .தன்ராஜ் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







## தியாகிகள் தினத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக் கொண்ட தேனி மாவட்ட காவல்துறையினர்

தேனி பிப். 01.-

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இன்னுயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 30ஆம் தேதி தியாகிகள் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்நாளில் தீண்டாமையை ஒழிக்கும் நோக்கில் உறுதிமொழி எடுக்கப்படுவதும் வழக்கமாக உள்ளது.அதன்படி, நேற்று காலை 11.00 மணிக்கு தேனி மாவட்ட காவல் அலுவலகத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr. B. சினேஹா ப்ரியா தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் காவல் துணைக் கண்காணிப்பாளர் தேவராஜ், காவல் ஆய்வாளர்கள், காவல் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் மற்றும் காவல் அலுவலக அமைச்சுப் பணியாளர்கள் கலந்துகொண்டு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

மேலும், தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் காவல்துறையினர் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.





■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்தில், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை சார்பாக, முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா இது நம்ம ஆட்டம் 2026 மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் ஆகியோர்துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட விளையாட்டு நலன் அலுவலர் நடராஜ முருகன், நாகோஜனஹள்ளி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, வட்டார வளர்ச்சி அலுவலர் உமாசங்கர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## செம்பாக்கம் ஏரி கழிவுநீர் கலப்பதை தடுத்திட நன்மங்கலம் ஏறிய பாதுகாத்திட நீர்நிலைகளை பாதுகாத்திட வலியுறுத்தி விழிப்புணர்வு நடைபயணம்

தாம்பரம் பிப் 01.-

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகளையும் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பாக தாம்பரம் மாநகராட்சி உள்ள செம்பாகம் ஏரியை சுத்தம் செய்து குப்பைகளை அகற்றி பாதுகாக்க வேண்டும் என்று செம்பாக்கம் ஏரி பாதுகாப்பு குழு சார்பில் இன்று செம்பாக்கம் ஸ்ரீ சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கம் சார்பில் 31.01.2026 அன்று காலை 6.30 மணி அளவில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் எஸ். சுந்தரமூர்த்தி தலைமையில் சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கத்தின் செயலாளர் எம்.ரவி முன்னிலையில் நன்மங்கலம் ஏரி





பாதுகாப்பு குழுவினர் திருமதி சத்யா அவர்களின் உடன் இணைந்து நடை பயணம் பேரணி நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகராட்சி 43வது மாமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சி.ஜெகன், 39வது மாமன்ற உறுப்பினர் கிரிஜா சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு கொடி அசைத்து துவக்கி வைத்தனர் இதில் காயிதே மில்லத் என்சிசி கல்லூரி மாணவர்கள், தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், நல சங்கங்கள், செம்பாக்கம் ஏரி பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு ஊர்வலமாக செம்பாக்கம் ஏரி மற்றும் அதனை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதியில் மேளத்தால முழக்கத்துடன் ஏரிகளை பாதுகாப்போம் ஏரிகளில் குப்பைகளை கொட்டுவதை தடுத்து நிறுத்துவோம், போன்ற வாசகம் அடங்கிய அட்டைகள் ஏந்தி கொண்டு கோஷங்கள் எழுப்பியவாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர் எக்ஸ்னோரா நிர்வாகி குளம் சுப்பிரமணியம், அனைத்து சங்க கூட்டமைப்பு தலைவர் முருகையன், சிட்லபாக்கம் அனைத்து சங்க ஒருங்கிணைப்பாளர் விசுவநாதன், இதில் சமூக ஆர்வலர் கலந்துகொண்டு ஏரிகளை எப்படி பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும் விழிப்புணர்வு ஊர்வலத்தில் தன்னார்வலர்கள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் சர்வமங்களா நகர் குடியிருப்போர் சங்கம் நிர்வாகிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

அதனைத் தொடர்ந்து நிறைவாக நடைப்பயணத்தின் சம்பந்தமாக செயலாளர் எம்.தங்கராஜ் விளக்க உரையாற்றினர்

இறுதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர் சங்கத்தின் துணைத் தலைவர் ஏ.ஜே.ஜெயவேல் நன்றி உரையாற்றினார்




# சிவகங்கை நகர உருவான தினம்: அரண்மனையில் சிலம்பம் சுற்றி அசத்திய மானாமதுரை மாணவர்கள்!

சிவகங்கை பிப் 01.-

சிவகங்கை நகரம் உருவான தினத்தையொட்டி, சிவகங்கை அரண்மனையில் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய சிறப்பு விழா உற்சாகமாக நடைபெற்றது.

**சிலம்பாட்டத் திறமை:**

இந்த விழாவில் சிவகங்கை ராணி ஸ்ரீஷி மதுராந்தக நாச்சியார் முன்னிலையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அரங்கேறின. குறிப்பாக, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சீனி ஆசான் சிலம்பக் கூடத்தின் தலைமை பயிற்சியாளர் செல்வம் தலைமையில் திரளான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். அவர்கள் வீரக்கலையான சிலம்பத்தை லாவகமாகச் சுற்றி, தங்களது அபார திறமையை வெளிப்படுத்தி அங்கிருந்தோரை வியப்பில் ஆழ்த்தினர்.

**சிறப்பு விருந்தினர்கள்:**

இந்நிகழ்வில் சிவகங்கை தேவஸ்தான அலுவலர்கள், பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகள் எனப் பலர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர். நகரத்தின் வரலாற்றுச் சிறப்பை விளக்கும் வகையில் அமைந்த இந்த விழா, உள்ளூர் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



# போச்சம்பள்ளியில்ரூ.32 லட்சத்தில் நீர்த்தேக்க தொட்டி கட்டுமான பணி மதியழகன் எம்எல்ஏ துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி.பிப் 01.-

போச்சம்பள்ளி ராசி நகர் பகுதியில் ரூ.32 லட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமான பணியை மதியழகன் எம்எல்ஏ துவக்கி வைத்தார்.

போச்சம்பள்ளி ஊராட்சி ராசி நகர் பகு தியில், சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தி னர் வசித்து வருகின்ற னர். இப்பகுதி மக்களின்கோரிக்கையை ஏற்று, ரூ.32 லட்சம் மதிப்பில் 60 ஆயி ரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டும் பணி தொடங்கியது.

தெற்கு ஒன்றிய செய லாளர் சாந்த மூர்த்தி தலைமை தாங்கினார். மாவட்ட அவைத்தலை வர் தட்ர அள்ளி நாக ராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சரவ ணன், கவுதம் முன்னிலைவகித்தனர். மாவட்ட செயலாளர் மதியழகன் எம்எல்ஏ கலந்து கொண்டு, பூமி பூஜை செய்து கட்டு மான பணியை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட அமைப்பாளர் அம்மன் ராஜா, மாவட்ட துணை செயலாளர் நாக ராஜ், தணிகைவேலன், நேதாஜி, சம்சுதீன், திருவ யல் சக்தி, கதிர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மக்களாட்சியில் கண்டுகொள்ளப்படாத மன்னர் அரண்மனை! : ஒலி ஒளி காட்சி ஏமாற்றம் - ஒழுங்கமைக்கப்படாத கட்டிடக்கழிவுகள்

மதுரை, பிப்.1

மதுரையை ஆண்ட மன்னர்களில மிகவும் முக்கியமானவர் மன்னர் திருமலை நாயக்கர். இவரது பிறந்த நாளான இன்று தைப்பூச திருநாளினை முன்னிட்டு அரசு விழாவாக இவரது பிறந்த நாள் மதுரையில் கொண்டாடப்படுகிறது. மதுரையின் வளர்ச்சியில் மிக முக்கிய பங்கு வகித்த மன்னர் திருமலை நாயக்கரின் படைப்பாற்றல் என்பது எதிரிகளும் ரசிக்கக் கூடிய ஒன்றாகும்.

அதிலும் குறிப்பாக காலம் கடந்தும் கம்பீரமாய் வீற்றிருக்கும் மன்னர் திருமலை நாயக்கரின் அரண்மனை இந்து அரேபிய கட்டிடக்கலையில் மிகச் சிறப்பான படைப்பாகும். இதனை நான்தோறும் கண்டு ரசிக்கின்ற சுற்றுலா பயணிகள் தற்போது ஏமாற்றத்தை சந்தித்து வருவது தான் பின்னடைவான ஒன்றாக இருக்கிறது.



வரலாற்றுச் சிறப்புமிக்க திருமலை நாயக்கர் மஹாலை காண தினமும் நூற்றுக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். ஆனால் கடந்த சில நாட்களாக நடைபெற்று வந்த ஒலி-ஒளி (Sound & Light) காட்சி நிறுத்தப்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் கடும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

திருமலை நாயக்கர் மஹால், மதுரையின் முக்கிய சுற்றுலா தளங்களில் ஒன்றாகும். மாலை நேரங்களில் நடைபெறும் ஒலி-ஒளி காட்சி மூலம் நாயக்கர் கால வரலாறு, மஹாலின் கட்டிடக் கலை சிறப்புகள், அரச மரபு ஆகியவை விளக்கமாக காட்சிப்படுத்தப்பட்டு வந்தது. இந்த காட்சி சுற்றுலாப் பயணிகளுக்கு பெரும் ஈர்ப்பாக இருந்தது.

ஆனால் தற்போது எந்தவொரு முன்னறிவிப்பும் இல்லாமல் இந்த நிகழ்ச்சி நடத்தப்படாததால், தூரத்திலிருந்து குடும்பத்துடன் வந்த பயணிகள் அதிருப்தி தெரிவித்தனர். "இணையத்தில் தகவல் பார்த்து, குறிப்பாக இந்த ஒலி-ஒளி காட்சிக்காகவே வந்தோம். ஆனால் இங்கு வந்தபின் அது நடைபெறவில்லை என்று சொல்கிறார்கள்," என சென்னையில் இருந்து வந்த ஒரு சுற்றுலா பயணி கூறினார்.

சிலர் கூறுகையில், தொழில்நுட்ப கோளாறு, ஒலி அமைப்பில் பிரச்சனை அல்லது பராமரிப்பு பணிகள் காரணமாக காட்சி நிறுத்தப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், அதிகாரப்பூர்வ விளக்கம் வெளியாகாதது பயணிகளிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

சுற்றுலா துறை அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுத்து, ஒலி-ஒளி காட்சியை மீண்டும் தொடங்க வேண்டும் என்றும், தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தால் அதுகுறித்த அறிவிப்புகளை முன்கூட்டியே வெளியிட வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த மஹாலில் முழுமையான அனுபவத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகியுள்ளது.

இங்கு நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகள் 2022ல் தொடங்கப்பட்டு தற்போது 80% வரை முடிந்து விட்டது. இந்த வேலைகள் ₹8 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. பிரமுக மண்டபம் (Durbar Hall), Natakasala போன்ற பகுதிகள் புதுப்பிக்கப்பட்டு, புதிய மியூசியம் மற்றும் வெளியிட்ட நூலகம் அமைக்கப்படுகின்றன பழைய கட்டிடத் தோற்றம் மாற்றாமல் பாரம்பரிய முறையில் புதுப்பிப்பு நடைபெறுகிறது. மஹாலில் நடைபெறும் ஒளி-ஒலி (Light & Sound) காட்சி தொழில்நுட்பம் மேம்படுத்தப்பட உள்ளது. இதில் ₹5 கோடி செலவு செய்யப்பட்டு state-of-the-art 3D projection mapping மற்றும் laser integration போன்ற நவீன தொழில்நுட்பம் சேர்க்கப்பட உள்ளது

மேலும் வெளிப்புறத்தில் நடைபெறும் பணிகளில் கட்டிடக்கழிவுகள் முழுமையாக அகற்றப்படாமல் இருப்பதால் காண்போரை முகம் சுளிக்க வைக்கிறது. பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்கள் நிறைந்த தமிழகத்தில் கலாச்சார தலைநகரமாக வழங்கக்கூடிய மதுரை மாநகரில் மக்களாட்சியில் மன்னர் அரண்மனை கண்டு கொள்ளப்படாமல் இருக்கலாமா என்ற கேள்வி எழுகிறது.

# "விடியா ஆட்சி & உங்கள் வீட்டு Bill-லே சாட்சி!": சிவகங்கையில் அதிமுகவினர் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரம் விநியோகம்

சிவகங்கை பிப் 01.-

திமுக அரசின் மின் கட்டண உயர்வு மற்றும் சொத்து வரி உயர்வினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிதிச் சுமையை விளக்கும் வகையில், "விடியா ஆட்சி & உங்கள் வீட்டு Billலே சாட்சி!" என்ற பிரசாரத்தை அதிமுக சிவகங்கை நகரில் தீவிரமாக முன்னெடுத்துள்ளது.

வரி உயர்வுகளால் மக்கள் அவதி

கழக பொதுச்செயலாளர், புரட்சித்தமிழர் எடப்பாடி கே. பழனிசாமி ஆணைக்கிணங்க, சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான செந்தில்நாதன் தலைமையில் இந்தப் பிரசாரம் நடைபெற்றது. திமுக ஆட்சியில் நிலவும் முறைகேடுகள், கமிஷன், கலெக்ஷன் மற்றும் ஊழல் ஆகியவற்றால் பொதுமக்கள் அன்றாடம் சந்திக்கும் இன்னல்களை மக்களிடம் நேரில் கொண்டு செல்வதே இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.



நேரடிச் சந்திப்பும் ஒப்பீடும்

சிவகங்கை நகர் கழகம் மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்பப் பிரிவு (IT Wing) சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்தனர். அப்போது:

* கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் இருந்த வரி விகிதங்கள்.

* தற்போதைய திமுக ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ள அநியாயமான வரிகள்.

ஆகியவை குறித்த தெளிவான ஒப்பீட்டு விளக்கங்கள் மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டன.

ரூபாய் 12 லட்சம் வரை இழப்பு அதிர்ச்சியில் பொதுமக்கள்

இந்த கள ஆய்வின் போது அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவந்தன. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் வரி உயர்வுகளால் (மின் கட்டணம், சொத்து வரி, தண்ணீர் வரி):

* ஒரு நபருக்குச் சராசரியாக ரூ. 12 லட்சம் வரையிலும்,

* மற்றொருவருக்கு ரூ. 9 லட்சம் வரையிலும், கூடுதல் நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது தெரியவந்தது. இந்த உண்மை நிலவரத்தைக் கேட்ட பொதுமக்கள் மிகுந்த வேதனையும், அதிர்ச்சியும் அடைந்தனர்.

முடிவுரை

மக்களின் இந்த பதபதைப்பே இந்த ஆட்சியின் தோல்விக்குச் சாட்சி என அதிமுக நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்த நிகழ்வில் சிவகங்கை மாவட்ட, நகர் கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டு திமுக அரசின் மக்கள் விரோதப் போக்கை விளக்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.


**அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், பழநி**

**2026 அம் ஆண்டு தைப்பூசத் திருவிழா அழைப்பிதழ்**

பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் 2026ம் ஆண்டு தைப்பூசத் திருவிழா 26.01.2026ம் தேதி தொடங்கி 04.02.2026ம் தேதி முடிய நடைபெறவுள்ளது.

முக்கிய திருநாள்கள் விவரம்

| விவரம் | நாள் | நேரம் |
|---|---|---|
| கொடியேற்றம் | 26.01.2026 | காலை 11.00 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் |
| திருக்கல்யாணம் | 31.01.2026 | மாலை 7.00 மணிக்கு மேல் 8.00 மணிக்குள் |
| வெள்ளித்தேர் | 31.01.2026 | இரவு 09.00 மணிக்குமேல் |
| தைப்பூசம் | 01.02.2026 | தைப்பூசம் |
| திருத்தேர் | 01.02.2026 | மாலை 4.00 மணிக்கு மேல் திருத்தேரோட்டம் |
| தெப்பத்தேர்<br>திருவிழா நிறைவு | 04.02.2026 | மாலை 7.00 மணிக்கு மேல் தெப்பத்தேர்<br>இரவு 11.00 மணிக்கு மேல் கொடியிறக்குதல் |
| தங்கரத சுவாமி புறப்பாடு இல்லாத நாட்கள் | 30.01.2026 முதல் 03.02.2026 முடிய | |

தைப்பூசத் திருவிழாவில் பக்தர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்து அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் திருவருளைப் பெற அன்புடன் அழைக்கிறோம்

நாள்.- 07.05.2021 முதல் 21.01.2026 முடிய

1. திருக்கோயில் – பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள கட்டணமில்லா வசதிகள்

| | 3. கூடுதல் வசதிகள் |
|---|---|
| 29. | மாற்றுத்திறனாளி பக்தர்கள் 08.12.2025 தேதி முதல் கட்டணமில்லாமல் சுவாமி தரிசனம் மற்றும் வின்ச் – ரோப்காரில் பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.<br>1) தரிசனம் – ஓராண்டிற்கு 5,00,000 பக்தர்கள், 2) ரோப்கார் – ஓராண்டிற்கு 60,000 பக்தர்கள்<br>3) வின்ச் – ஓராண்டிற்கு 25,000 பக்தர்கள் பயனடைகிறார்கள் |
| 30. | கிரிவீதி பகுதியில் திருக்கோயில் சார்பாக 26.01.2026 முதல் 04.02.2026 முடிய 10 நாட்களுக்கு நாள்முழுவதும் அன்னதானம் வழங்கப்படும். |
| 31. | மலைக்கோயிலில் சுவாமி தரிசனத்திற்கு க்யூ வரிசையில் காத்திருக்கும் பக்தர்களுக்கு திருக்கோயில் சார்பாக தண்ணீர் பாட்டில் மற்றும் பிஸ்கட் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 32. | பக்தர்களின் வசதிக்காக 31.01.2026 முதல் 02.02.2026 முடிய மூன்று நாட்களுக்கு கட்டணமில்லாமல் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 33. | மலைக்கோயிலுக்கு வரும் மூத்த குடிமக்கள், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்கு தனி வரிசை ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| 34. | பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு இரவு நேர பாதுகாப்பிற்காக திருக்கோயில் சார்பாக காவல் துறை மூலம் ஒளிரும் குச்சிகள் வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 35. | மலைக்கோயிலுக்குச் செல்லும் பக்தர்களின் வசதிக்காக குடமுழுக்கு நினைவரங்கு, யானைப் பாதை, இடும்பன் கோயில், படிப்பாதை, கிரிவீதி பகுதிகள், மலைக்கோயில் ஆகிய இடங்களில் போதுமான சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. |
| 36. | பாதயாத்திரையாக வரும் பக்தர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்க நடமாடும் மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன மற்றும் பக்தர்களுக்கு கூடுதலாக ஆம்புலன்ஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. |
| 37. | பக்தர்களின் வசதிக்காக கிரிவீதிகளில் கட்டணமில்லா குளியலறை மற்றும் கழிப்பறை வசதிகள் சுகாதாரமான முறையில் திருக்கோயில் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் ஆண்/ பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. |
| 38. | இடும்பன் குளம் மற்றும் சண்முகநதியில் பக்தர்கள் நீராடும்போது விபத்துகள் ஏற்படாதிருக்கும் பொருட்டு, பக்தர்களுக்கு ஷவர்கள் மூலம் நீராடும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. |
| 39. | இத்திருக்கோயில் சார்பாக 1) கிழக்கு கிரிவீதி சுற்றுலா பேருந்து நிலையம், 2) கோசாலா பேருந்து நிலையம் மற்றும் 3) தண்டபாணி சுவாமி மடம் வாகன நிறுத்தும் இடம் ஆகிய 3 இடங்களில் பக்தர்கள் இலவசமாக ஒரே நேரத்தில் 700 வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 40. | பக்தர்களின் வசதிக்காக தைப்பூசத் திருவிழாவின் முக்கிய நாட்களான 31.01.2026 முதல் 02.02.2026 முடிய மூன்று நாட்களுக்கு நகரப் பேருந்துகள் திருக்கோயில் சார்பாக இலவசமாக இயக்கப்படும். |
| 41. | பக்தர்கள் வசதிக்காக மேற்கு கிரிவீதியில் கூடுதலாக பொருட்கள் வைப்பறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| 42. | திருக்கோயில் தலைமை அலுவலகத்தில் 24 மணிநேரமும் பக்தர்களின் அவசர உதவிக்காக மூன்று தொலைபேசி எண்களுடன் கட்டுப்பாடு அறை வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. (Toll free Number :- 1800 425 9925)<br>(அவசர உதவி எண்கள் :- 04545 -240293 / 04545 -241293 / 04545 -242236) |
| 43. | பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்வதற்கு ஏதுவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள (Queue) வரிசைகளில் அமைதியாகவும், விரைவாகவும் சென்று தரிசனம் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். |

செ.மாரிமுத்து
இணை ஆணையர்/செயல் அலுவலர்
ரெ.சா.வெங்கடேஷ்
துணை ஆணையர்
சு.லட்சுமி
உதவி ஆணையர்/நேர்முக உதவியாளர்

கே.எம்.சுப்பிரமணியன்
தலைவர், அறங்காவலர் குழு
சு.தனசேகர்
சு.பாலசுப்பிரமணி
ஜி.ஆர்.பாலசுப்பிரமணியம்
சி.அன்னபூரணி
அறங்காவலர்கள்







Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161